**துணை ஆணையர் (மா.வ) (மு.கூபொ) புதுக்கோட்டை அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திருமதி.சி.ஹேமா பி.டெக்.,**

ந.எ. 981/2019/அ1

நாள்: 16.12.2019

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - திருச்சிக் கோட்டம் - புதுக்கோட்டை (மா.வ) மாவட்டம் - நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு-IV - பணிகள் - 2015-16, 2016-17, மற்றும் 2017 -18 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு - நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை க.எ. 1330/PSD - G1/2019 நாள்: 18.02.2019
2. திருச்சிக் கோட்ட (மா.வ), இணை ஆணையர் அவர்களது செ.மு.ந.எ.14988/2018/ஆ2 நாள்: 25.02.2019.
3. இவ்வலுவலக செ.மு.ந.எ.981/2019/அ1 நாள்: 25.02.2019.

*********

**ஆணை:**

பார்வை-1-ல் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்ட கீழ்க்காணும் பணியாளர்கள், பார்வை-2-ல் காணும் திருச்சிக் கோட்ட (மா.வ) இணை ஆணையர் அவர்களது செயல்முறை ஆணையின்படி புதுக்கோட்டை (மா.வ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கீழ்வரும் அலுவலகங்களில் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு, பணியாற்றி வருகின்றனர். தனியாளர்களுக்கு கீழ்காணுமாறு பணியில் சேர்ந்த தேதிகளில் முறையே சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றின் தொகுதி-IV போட்டித்தேர்வு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-18 தெரிவு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கியும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், இப்பணிக்காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பணியாளரது பெயர் / தி.ள். | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | ம.ரவிக்குமார் | மாநிலவரி அலுவலர், பட்டுக்கோட்டை -I | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |
| 2. | இரா.தமிழ்செல்வி | துணை ஆணையர் (மா.வ), புதுக்கோட்டை.(Audit, Arrear & Refund) | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |
| 3. | ஆ.ஆனந்த் | மாநிலவரி அலுவலர், அறந்தாங்கி. | 04.03.2019 மு.ப | 04.03.2019 மு.ப |

துணை ஆணையர் (மா.வ) (மு.கூ.பொ),
புதுக்கோட்டை.

பெறுநர்

தனிநபர்கள்.

16/12/19 16/12/19

நகல்: மாநிலவரி அலுவலர் அலுவலகம், பட்டுக்கோட்டை - 1
நகல்: மாநிலவரி அலுவலர் அலுவலகம், அறந்தாங்கி.

(தனிநபரின் பணிப்பதிவேட்டினில் உரிய பதிவுகள் மேற்கொண்டு விபரம் தெரிவிக்கும் பொட்டு).

நகல்: திருச்சிக் கோட்ட (மா.வ), இணை ஆணையர், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகின்றது.